# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශේෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/46—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1967.12.17

243/46 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(70)/76

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மேல், சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**வி. கொபல்லவ,**
**சனாதிபதி.**

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976 திசெம்பர் 17.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் அவசரகால (அரச அலுவலர்களைப் பாதுகாத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இவ் ஒழுங்குவிதிகள், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தில் உள்ளது எதனையும் பொருட்படுத்தாது, பயனுடையனவாதல் வேண்டும்.

3. தண்டனைச்சட்டக் கோவையில் 323 ஆம் பிரிவின் கீழான தவறினை (அரச அலுவலர்க்குக் காயம் விளைத்தல்), அல்லது 324 ஆம் பிரிவின் கீழான தவறினை (அரச அலுவலர்க்கு கடுங்காயம் விளைத்தல்), அல்லது 344 ஆம் பிரிவின் கீழான தவறினை (அரச அலுவலர்மீது குற்றவியல் வலோத்காரம் பிரயோகித்தல்) புரிந்துள்ளார் என ஆள் எவரேனும் சந்தேகிக்கப்படுமிடத்து அல்லது குற்றஞ்சாட்டப்படுமிடத்து அவர் நீதிவான் ஒருவர் முன்னிலையில் கொண்டு வரப்படுதல் வேண்டும். நீதிவானும் அவரால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அம்முறைப்பாடு சிறுமையானது, அலைக்கழிப்பதற்கானது அல்லது அற்பத்தன்மையானது என அவர் கருதினால் ஒழிய, அவர் அந்த ஆளை விளக்கமறியலில் வைத்தல் வேண்டும்.

4. (1) மூன்றும் ஒழுங்குவிதியின்கீழ் ஆள் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்படுமிடத்து, அவ்விதம் விளக்கமறியலில் வைத்தமை பற்றியும் அவ்விடயம் சம்பந்தமான சூழ்நிலைகளைப் பற்றியும் நீதிவான் உடனடியாக நீதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஆள் ஒருவர் அவ்விதம் விளக்கமறியலில் வைக்கப்படுமிடத்து, நீதியமைச்சின் செயலாளர் அவரது தற்றுணிபின்பேரில் மறியற்சாலையாணையாளருக்கு எழுத்தில் விடுக்கும் கட்டளை மூலம், அக்கட்டளையில் அச்செயலாளரால் குறிப்பிடப்படும் அத்தகைய நியதிகள் அல்லது நிபந்தனைகள் எவையேனும் உளவேல் அவற்றுக்கு அமைய அத்தகைய ஆள் விட்டுவிடப்படல் வேண்டும் எனப் பணித்தாலொழிய, அவருக்கு எதிரான நடவடிக்கைகள் முடிவடையும் வரை மறியற்சாலையாணையாளரின் கட்டுக்காப்பில் அவர் இருத்தல் வேண்டும்.

(3) இவ் ஒழுங்குவிதியின்கீழ் நீதியமைச்சின் செயலாளரால் ஆக்கப்பட்ட கட்டளையைப் பெற்றதும் மறியற்சாலையாணையாளர் அத்தகைய கட்டளையைச் செயற்படுத்துதல் அவரின் கடமையாதல் வேண்டும்.

(4) எவையேனும் நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கமைய ஆள் எவரேனும் இவ்வொழுங்குவிதியின்கீழ் விட்டுவிடப்படுமிடத்து, அத்தகைய நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு இசைந்தொழுகுதல் அல்லது இணங்கி ஒழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும் ; அவ்விதம் செய்யாதுவிடுதல் தவறென்றாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது